அரசுக்கு எண்ணம் உண்டா ? அப்படியிருந்தால் அதைத் தேர்தல் கமிஷன் அல்லது மத்திய சர்க்காரைக் கலந்து கேட்டுத்தான் செய்ய வேண்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி இந்தக் கேள்வியோடு தொடர்பு உடையது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : அவர்கள் யார் என்று அறிவிக்க முடியுமா ? அதே போன்று தொடர்ந்து பல குறைபாடுகள் இருந்த தென்று அறிவித்ததற்குப் பிறகும் தொடர்ந்து நீடிக்க வைப்பதன் காரண மாக கூட்டுறவு கைத்தறிச் சங்கம் பாதிக்கப்படுகிறது. ஆகையால் அதை முன்னிட்டாவது துரிதமாக நடவடிக்கை எடுத்து ஊழல்கள் ஏற்படாமல் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவர்கள் தக்கோலத் தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. முன்பு அவர் அங்கு கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினராக இருந்தார். வளர்புரி செல்வ விஞயகர் நெச வாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதிநிதியாக அனுப்பியது சட்டப்படி செல் லாது என்று தெரிவித்த காரணத்தால் சட்டப்படி, ஒழுங்குப்படி, நீதியின் படி செயல்கள் ஆற்றப்பட வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். ஆகவே, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அகில இந்திய கைத்தறி போர்டு.

*127 வினு.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) பம்பாயிலிருக்கும் அகில இந்திய கைத்தறி போர்டு தலைமை அலுவலகத்தை சென்னைக்கு மாற்றும்படி இம்மாநில அரசு கேட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இது தமிழ்நாடு கைத்தறி சம்மேளனத்தின் சார்பிலும் சரி, அங்கேயுள்ள கதர் சம்பந்தப்பட்ட அதி காரிகளின் சார்பிலும் சரி பம்பாயிலே அந்த போர்டு இருப்பதினுலே அங்கே நெசவுத் தொழில் பாதிக்கப்படுகிறது. அதை மாற்ற வேண்டு மென்று கூறியிருக்கிருர்களா ? அந்த அடிப்படையில் மாற்றுவதற்கு மீண்டும் அது சம்பந்தமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: அகில இந்திய கைத்தறிக் கழகம் 1952-ல் நிறுவப்பட்டது. அதனுடைய தலைவர்தான் டெக்ஸ்டைல் கமிஷனராகவும் இருக்கிருர். பம்பாயிலேதான் டெக்ஸ்டைல் கமிஷனரின் அலுவலகம் இருக்கிறது. ஆகையால், வசதியைப் பொறுத்து அங்கே நிறுவப்பட்டிருக்கிறது. ஆனல், அகில இந்திய கைத்தறிக் கழகத்தினு டைய கூட்டங்கள் இந்தியாவில் பல்வேறு பகுதிகளிலும் அங்கங்கே நடை பெறும். ஆதலால் அதை மாற்றவேண்டிய அவசியம் இல்லை என்று தெரிகிறது.

THIRU. K. VINAYAKAM : Even if this Government decides to shift it, it is not within the powers of the State Government. Because, it is an All India Organisation being controlled by the Central Government. Under these circumstances, will the Government consider the possibility of establishing a branch office of the headquarters at Madras ?

1967 ஜூலை 1]

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : அவைத்தலைவர் அவர்களே, இந்திய அரசாங்கம் செய்ய வேண்டிய பணிதான் இது. அதன் கீழ்தான் இருக்கிறது. பம்பாயில் ஏன் இருக்க வேண்டுமென்று கேட்கப்பட்டது. கிளை வேண்டுமா? அவசியமா? என்று கண்டறிந்த பிறகுதான் இது நிறைவேற்றுவது பற்றி யோசிக்கப்படும்.

திரு அ. கு. சுப்பையா : அகில இந்திய கைத்தறி போர்டில் நமது ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் யார், யாரை அங்கே வைத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : இந்திய நாடு முழுதும் எடுத்துக் கொண்டால் கைத்தறி நெசவுத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களில் அதிகம் பேர்கள்—6 லட்சம் பேர்கள் தமிழ்நாட்டில் தான் இருக்கிறார்கள். அதை உத்தேசித்து அந்தக் கழகத்தை சென்னையிலே நிறுவுவதற்கு உறுப்பினர் திரு. விநாயகம் போன்றவரின் உதவியோடு வாதித்து இங்கே நிறுவுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதற்கு சேர்மென் ஆக இருப்பவர்தான் டெக்ஸ்டைல் கமிஷனராகவும் இருக்கிறார். அவர்களின் பணிகளைப் பொறுத்தவரை அங்கே இருப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று இந்திய அரசு தெரிவித்தது. கைத்தறிக் கழகத்தின் கூட்டங்கள் எல்லாம் தேவைப்படுகிறபோது நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெறுகின்றது. அங்கே தகுந்த நிலைமைகளை உருவாக்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்திலே தேவைப்படும்போது வந்து கவனிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறதென்ற கருத்தை இந்திய அரசு தெரிவித்தது.

திரு வி. கே. கோதண்டராமன் : கைத்தறி போர்டு சம்பந்தப்பட்டவரையில் ராஜ்ய அடிப்படையில் அங்கே இருக்கிற போர்ட் சரியாக இயங்கவில்லை என்று தெரியுமா? ஆகவே, ராஜ்ய அடிப்படையில் சரியாக இயங்கவேண்டும் அல்லது, அந்த போர்டை இங்கே மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் கூறுகிறபடி விவரம் எதுவும் இல்லை. அந்த போர்டு இங்கே வரவேண்டும் என்று சொல்வதிலே வேண்டுமானால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. விநாயகம் : இந்திய கைத்தறி நெசவாளர் போர்டு இன்று பம்பாயில் இருப்பது சென்னைக்கு வரவேண்டியதில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சென்னை மாகாணத்திலே கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்களா? பம்பாய் மாகாணத்திலே அதிகமாக இருக்கிறார்களா? சென்னையில் கிளை ஸ்தாபனத்தை வைக்காததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : வரவேண்டிய அவசியம் இல்லையென்று நான் சொல்லவில்லை. இந்திய அரசு பம்பாயில் ஏன் வைத்திருக்கிறது என்பதற்கான காரணத்தை சொல்லுகிறது. இந்த மாகாணத்தைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட ஏழு லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். இந்தியா முழுவதும் எடுத்துக்கொண்டால் 27 ,28 லட்சம் பேர் எல்லா மாநிலங்களிலும் இருக்கிறார்கள். ஆகவே, அதை இங்கே கொண்டுவர வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால் இங்கே கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படலாம்.